**Starting time  11.50 A.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 109/2011**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 17.11.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : கற்பகம் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**1-**ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி: என்னை கொட்டவாடி அருகில் கரடிப்பட்டி கிராமத்தில்தான் திருமணம் செய்துகொடுத்தார்கள் என்றால் ஆமாம். சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால், இல்லை. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால், ஆமாம். நானும், எனது குடும்பதாரரும் எந்த வருடத்தில் பிரித்துக் கொண்டோம் என்றால், 2004 ஆகும். என் பாகத்திற்காக 2500 ரூபாய் பணம் கொடுத்தார் என்றால், ஆமாம்.

2. மேற்படி பாகப்பிரிவினையில் யார் யாருக்கு எந்தெந்த சர்வே எண்களில் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால், தெரியாது. ஆனால் இரண்டாக பாகம் பிரித்துக்கொண்டார்கள்.ஜெயகுமார் பாகத்திற்கு செல்லும் தடமானது அணை கட்ராயன் கோவிலுக்கு செல்லும் பாதையில் இருந்து மேற்கு நோக்கி திரும்பி பின்பு தெற்கு நோக்கி சென்று பின்பு மேற்கு நோக்கி திரும்பி ஜெயக்குமார் பாகத்திற்கு செல்லம் வேண்டும் என்றால், அனைவரும் அந்த பாதையை பொது பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள்.

3. பாகப்பிரிவினை பின்னிட்டு நான் அந்த பாதையில் சென்றதில்லை என்றால், எனக்கு அங்கு வேலை இல்லாததால் நான் அங்கு செல்லவில்லை. பரிவர்த்தினைப் பத்திரம் குறித்து

எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியும். அந்த பரிவர்த்தனை பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டேனா என்றால், இல்லை. பரிவர்த்தனை பத்திரம் செய்துகொள்ளுவது பற்றி ராஜேந்திரன் என்னிடம் சொன்னார் நான் ஒப்புக்கொண்டேன். அதற்குள் என் கணவர் இறந்துவிட்டதால் அவர்களுக்குள்ளவே பரிவர்த்தனை செய்துக்கொண்டார்கள். புல எண் 88/1 டி ஆனது பாகப்பிரிவினைப்பத்திரத்தில் ஜெயக்குமாருக்கு பிரிந்தது என்றால், இருவரும் ஆளுக்கு பாதியாக பிரித்துக்கொண்டார்கள், கிணறும் பாதி தான் பிரித்துக்கொண்டார்கள்.

4. ராஜேந்திரனுக்கு பிரிந்த E செட்டியூல் உள்ள மின் இணைப்பு எண்.15 ஆனது ராஜேந்திரனுக்கு மட்டும்தான் பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. மின் இணைப்பு 415 ஆனது ஜெயகுமாருக்கு பாத்திய்ப்பட்டது என்றால், சரியல்ல. புல எண் 88/1டி உள்ள கிணற்றில் கிணறானது ஜெயகுமாருக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அதில் ராஜேந்திரேனா பரமசிவன் வகையறவோ எந்த காலத்திலோ தண்ணீர் இறக்க வில்லை என்றால், சரியல்ல. பாகப்பிரிவினைப்பத்திரம் பின்னிட்டு நான் நிலங்கள் பக்கமே போகததால் எனக்கு எந்த விவரம் தெரியாது என்றாலும், வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**2-**<u>ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> வாதி 2-ம் பிரதிவாதிகக்கு எதிராக வழக்கில் எந்த பரிகாரம் கேட்கவில்லை என்றால், சரிதான். 2-ம் பிரதிவாதி பொறுத்து என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

Ending Time: 12.10 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.